*கவனிக்க.-*19.12.2025 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழி மூலம்) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2469 - 2025 දෙසැම්බර් මස 26 වැනි සිකුරාදා - 2025.12.26**

2469 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 5 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, சனவரி மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2026, சனவரி மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

731 - B82750 - 5403 (2025/12)

# பதவிகள் - வெற்றிடம்

திருத்தம்

**கண்டி மாநகர சபை**

ஆங்கில மொழிமூல முன்பள்ளிகளுக்கான ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ளல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்

2025.12.19 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2469 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பதவிகளுக்குமான இல. 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமை தொடர்பான பகுதியினைக் கீழ்வருமாறு திருத்தியமைக்கின்றேன்.

4. கல்வித் தகைமைகள் : சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம், கணிதம் உட்பட இன்னும் 02 (இரண்டு) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

* குறித்த அறிவித்தலில் உள்ள ஏனைய கல்வித் தகைமைகள் அவ்வாறே அமையும்.

ஏ. எச். எம். இந்திகா குமாரி அபேசிங்க,
நகர ஆணையாளர்,
கண்டி மாநகர சபை.

12 - 652

---

**வலப்பனை பிரதேச சபை**

வலப்பனை பிரதேச சபையின் சுகாதார பணியாளர் பதவிக்காக இருவர் (02) மற்றும் வேலை/ களப் பணியாளர் பதவிக்காக இருவர் (02) (முதல்நிலை அல்லாத சேவை) (06 மாதங்களுக்கு) நாள் சம்பளம் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தல்.

வலப்பனை பிரதேச சபையின் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு உரிய சேவையில் ஈடுபடுவதற்கு வலப்பனை பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

| *பதவி* | *வெற்றிட எண்ணிக்கை* |
|---|---|
| சுகாதார பணியாளர் (நாள் சம்பளம்) | 02 |
| வேலை/ களப் பணியாளர் (நாள் சம்பளம்) | 02 |

மத்திய மாகாண சபை அரசாங்க சேவையில் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் (முதல்நிலை அல்லாத) சேவை யாப்பின் அடிப்படையில் தகைமை :

01.1 தரம் : III தரம் (நாள் சம்பளம் அடிப்படையில்)
01.2 தகைமை :
01.2.1 கல்வித் தகைமை :

| *இல.* | *பதவி பெயர்* | *பதவி எண்ணிக்கை* | *பணி நியமன இடம் மற்றும் பணிகள்* | | கல்வி மற்றும் வேறு தகைமை |
|---|---|---|---|---|---|
| | | | *பணி நியமனம் செய்யும் இடம்* | *பணிகள்* | |
| 01 | சுகாதார பணியாளர் (நாள் சம்பளம்) | 02 | ராகலை | வீதி இருமருங்கிலும் வடிகாண் சுத்தம் செய்தல், புல் வெட்டுதல், மஞ்சள் கோடுகளை வரைவதற்கு ஒத்துழைத்தல், தார் போடுதல், ப்ரிமீக்ஸ் தயாரிப்பதற்கு கையுதவி செய்தல், வீதிகளை கூட்டுதல் துப்புரவு செய்தல், கழிவகற்றும் இயந்திர பணிகள், குப்பைகளை சேகரித்து டிரெக்டர்களுக்கு கொட்டுதல், பொது மலசலகூடம், துப்புரவு செய்தல் பணிகள் உட்பட துப்புரவு செய்யும் பணிகள். | கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாத தடவைகளின் போது 02 சி தர சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல், அதில் 05 பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருக்க வேண்டும். தகைமைகளை பூ ர ண ப் ப டு த் தி யு ள் ள விண்ணப்பதாரிகள் இல்லாத பட்சத்தில் 05 ஆம் தரம் பயின்றவர்களும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள் ளப்படும். |
| 02 | வேலை/ களப் பணியாளர் (நாள் சம்பளம்) | 02 | பதியபெலெல்ல மற்றும் உடபுஸ் ஸல்லாவ | | |

01.2.2 உடற் தகைமை :

I. அனைத்து விண்ணப்பதாரிகளும் சிறந்த கண் பார்வையுடன் இருக்க வேண்டும் என்பதுடன் பகல் நேரங்களிலும் இரவு நேரங்களிலும் பணியில் ஈடுபடுவதற்கு போதுமானளவு உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

II. குறைந்தபட்ச உயரம் 05 அடி 02 ½ அங்குலமாக இருத்தல் வேண்டும்.

01.2.3 வேறு :

I. பரம்பரையில் அல்லது பதிவால் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரிகள் வலப்பனை பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் 03 வருடங்களுக்கு குறையாமல் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

III. தேவையான அனைத்து தகைமைகள், அந்த தகைமையை முழுமைப்படுத்தி இருக்க வேண்டும் என விண்ணப்பம் வெளியாகும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதிக்கு அனைத்து விதத்திலும் முழுமைப்படுத்தி இருத்தல் வேண்டும்.

01.3 வயது :

01.3.1 குறைந்த வயதெல்லை : 18 வருடங்களாகும்.

01.3.2 ஆகக்கூடிய வயதெல்லை : 45 வருடங்களாகும்.

01.4 ஆட்சேர்ப்பு முறைமை :

ஆட்சேர்ப்பு செய்யும் நடைமுறையின் அடிப்படையில் முறையான கட்டமைப்பு நேர்காணல் ஒன்றின் புள்ளிகளின்படி தேவையான அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகளின் அதிகூடிய புள்ளிகள் பெற்று கொண்டவர்களில் தகுதியுடையோர் தெரிவு செய்யப்படுவார்கள்.

01.5 விண்ணப்பிக்கும் முறைமை :

இந்த அறிவித்தலின் மாதிரி வடிவமைப்பின்படி விண்ணப்பங்கள் 12 x 8 அளவில் தயாரிக்கப்பட்டு, "வலப்பனை பிரதேச சபையின் சுகாதார பணியாளர் (நாள் சம்பளம்) வேலை/ களப் பணியாளர் (நாள் சம்பளம்) பதவி வெற்றிடத்திற்காக நாளாந்த சம்பள அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல்" என்று எழுதி உரிய கடித உரையின் இடது மேல் மூலையில், 2026.01.16 ஆம் திகதிக்கு முன்னர் ''செயலாளர், பிரதேச சபை, வலப்பனை" என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குள் கிடைக்கப் பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பின்வரும் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் விண்ணப்பங்களுடன் அனுப்பப்பட வேண்டும்.

1. பிறப்பு சான்றிதழ் ;
2. கல்விச் சான்றிதழ் ;
3. தேசிய அடையாள அட்டை பிரதி ;
4. பதிவை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் ;
5. பொலிஸ் அறிக்கை.

விண்ணப்பங்கள் கோரப்படும் போது அல்லது அதற்குப் பிறகான காலப்பகுதியில் அல்லது இந்த ஆட்சேர்ப்பை தாமதப்படுத்தவோ அல்லது மாற்றவோ அல்லது இந்த அறிவிப்பை இரத்து செய்யவோ அல்லது திருத்தவோ வலப்பனை பிரதேச சபையின் செயலாளருக்கு உரிமை உண்டு.

இந்த அறிவிப்பின் சிங்கள மற்றும் தமிழ் பதிப்புகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால், சிங்கள அறிவிப்பின்படி தொடர்புடைய விஷயங்கள் செல்லுபடியாகும்.

செயலாளர்,
வலப்பனை பிரதேச சபை,

பிரதேச சபை,
வலப்பனை,
2025, திசெம்பர் 19.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

வலப்பனை பிரதேச சபையின் ............................ சுகாதார பணியாளர் (நாள் சம்பளம்) வேலை/ களப் பணியாளர் (நாள் சம்பள அடிப்படையில்) 06 மாதங்கள் சேவையில் ஈடுப்படுவதற்காக கோரப்படும் விண்ணப்பப்பத்திரம்

1. முதலெழுத்துக்களுடன் முழுப்பெயர் : ……………………………………………………………………………………………
2. முழுப்பெயர் : ……………………………………………………………………………………………………………………
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ………………………………..……………………………………………………
4. பிறந்த திகதி : வருடம் : ………………. மாதம் : ………… நாள் : …………….
5. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதிக்கு வயது : வருடம் :……………. மாதம் :………… நாள் :………………
6. பெண்/ ஆண் பாலினம் :……………………..
7. திருமணமானவர்/ திருமணமாகாதவர் விபரம் :………………..
8. இனம் : ………………
9. நிரந்தர முகவரி : ………………………………………………………………………..
10. தொலைபேசி இலக்கம் : ……………………………
11. நீங்கள் இலங்கை பிரசையா? பிறப்பால்/ பதிவு மூலம் எனும் விபரம் :…………………………

க.பொ.த (சா.த) பரீட்சை தொடர்பான விபரம் :

முதல் தடவை
வருடம் மற்றும் மாதம் :…………….
பரீட்சை சுட்டெண் :…………………..

இரண்டாவது தடவை
வருடம் மற்றும் மாதம் :…………….
பரீட்சை சுட்டெண்:……………………..

12. கல்வித் தகைமை :

| *பாடம்* | *தரம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 1. | |
| 2. | | 2. | |
| 3. | | 3. | |
| 4. | | 4. | |
| 5. | | 5. | |
| 6. | | 6. | |
| 7. | | 7. | |
| 8. | | 8. | |
| 9. | | 9. | |
| 10. | | 10. | |

13. தொழில் நிலை தகைமை : ……………………………………………………………………………………………..….
……………………………………………………………………………………………………………………………..….
……………………………………………………………………………………………………………………………..….

14. அனுபவம் : ………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………………………

இந்த விண்ணப்பத்தில் நான் வழங்கிய தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்று இதன் மூலம் உறுதிப்படுத்துகிறேன். இந்தப் பதவிக்கு நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு இதில் உள்ள ஏதேனும் தகவல்கள் தவறானவை எனக் கண்டறியப்பட்டால், நான் தகைமையற்றவர் எனப்படுவேன் என்றும், நான் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அது தவறானது

எனக் கண்டறியப்பட்டால், எந்தவொரு இழப்பீடும் இல்லாமல் பணியிலிருந்து நீக்கப்படுவதற்கு கீழ்ப்படிவேன் என்றும் இதன் மூலம் வெளிப்படையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

…………………….…………
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ………………….

**திணைக்கள/ நிறுவன தலைவரின் உறுதிப்படுத்தல்.**

இந்த விண்ணபத்தை சமர்ப்பிக்கும் …………………………….. திரு./திருமதி/செல்வி இந்த திணைக்களா/ நிறுவனத்தில் நிரந்தர/ தற்காலிக/ இடைக்கால/மாற்றுப்பணியாளராக பணியாற்றி வருகிறார் என்பதை உறுதிப்படுத்துகிறேன். இவர் இப்பதவிக்குத் தேர்வு செய்யப்பட்டால், சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்பதை அறிவிக்கிறேன்.

..................................................
திணைக்களா/ நிறுவன தலைவரின் கையொப்பம்

திகதி : …………………………

12 - 637

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**கண்டி மாநகர சபை**

ஆதன வரி விதிப்பு - 2026

கண்டி மாநகர சபையின் 2005 செத்தெம்பர் 02 ஆம் திகதி 8/38 ஆம் இலக்க சபை தீர்மானத்தின் படி கீழ்வரும் பிரேரணைகள் எடுக்கப்பட்டுள்ளது என பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது

2026 ஆம் ஆண்டிற்கு விதிக்கப்பட்டுள்ள ஆதன வரி கட்டணத்தை 4 (நான்கு) காலாண்டிற்கும் சம தவணைகளாக முறையே மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 என்ற திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் கண்டி மாநகர சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் ஆதன வரி கட்டணத்தினை செலுத்த தவறும் அனைத்து சொத்துக்களுக்கும் மாநகர சபை கட்டளை சட்டத்தின் 252 ஆவது அதிகாரத்தின் படி குடியிருப்பு உடைமைகளிற்கு 15% தண்டப் பணமும், குடியிருப்பு அல்லாத உடைமைகளுக்கு 20% தண்டப் பணமும், அறவிடப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

2026 ஆம் வருடத்திற்கு விதிக்கப்பட்டுள்ள முழு ஆதன வரி கட்டணத்தினையும் 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் செலுத்தும் போது முழு ஆதன வரி தொகையில் 10% கழிவினையும், ஒவ்வொரு காலாண்டிற்குரிய ஆதன வரி கட்டணத்தினை அந்தந்த காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தும் போது அவ்வவ் காலாண்டுக்குரிய ஆதன வரி கட்டணத்தில் 5% கழிவினையும் பெற்றுக் கொள்ள முடியும்.

சந்ரசிரி விஜேனாயக,
நகரபிதா,
கண்டி மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கண்டி,
2025, திசெம்பர் 03.

**தீர்மானம்**

252 ஆவது அதிகாரமான மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 238 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் பிரகாரம் மாநகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி கண்டி மாநகர சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட அனைத்து தனிநபருக்கு சொந்தமான வீடுகளுக்கு, கட்டிடங்களுக்கு, கட்டப்படும் கட்டிடங்களுக்கு காணிகளுக்கு, மற்றும் வீடுகளுக்கு 2026 ஆம் ஆண்டு புதிய வருடாந்த மதிப்பீட்டுக்கு அமைய அறவிடுவதற்கும்.

அதை மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 230 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் பிரகாரம் மாநகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி மேற்கூறப்பட்டுள்ள வருடாந்த மதிப்பீட்டில்,

1. குடியிருப்பு உடைமைகளிற்கான வருடாந்த பெறுமதியின் 14% ஆதன வரி விதிப்பும்.

2. வர்த்தக நடவடிக்கைகளுக்கு பாலிக்கப்படும் இடங்கள், நிர்மாணிக்கப்படும், நிலம், தரிசு நெல் வயல்கள் ஆகியவற்றிற்கு 21% ஆதன வரி விதிப்பினை மேற்கொண்டு அறவிடவும்.

3. பயிர் செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ள வயல்களுக்கு வரி விலக்கு அளிக்கவும்.

அந்த ஆதன வரியானது, மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 230 ஆவது பகுதியின் (2) ஆவது உப பிரிவின் (இ) பந்தியின் நியதிகளுக்கு அமைய 4 (நான்கு) காலாண்டிற்கும் சம தவணைகளாக முறையே மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 என்ற திகதிகளுக்கு முன்னர் கண்டி மாநகர சபை அலுவலகத்திற்கு செலுத்துவதற்கான கட்டளையானது இத்தால் முன்மொழியப்படுகின்றது.

12 - 492/1

---

**கண்டி மாநகர சபை**

மதிப்பீட்டு ஏடு (ஆவணம்) - 2026

2026 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டு ஏடுகள் தற்போது தயாராக உள்ளதுடன் அவ் ஏடுகள் அலுவலக நேரத்தில் இந்த அலுவலகத்தில் பரீசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளது என்பதனையும் 252 ஆவது அதிகாரமான மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 235 (1) ஆவது பிரிவின் பிரகாரம் பொது மக்களுக்கு இத்தால் பிரகடனப்படுத்திக் கொள்கின்றேன

சந்ரசிரி விஜேனாயக,
நகரபிதா,
கண்டி மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கண்டி,
2025, திசெம்பர் 03.

12 - 492/2

---

**மெததும்பர பிரதேச சபை**

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் கீழ் (272 ஆவது அதிகாரம்) மாட்டிறைச்சி விற்பனை நிலையம் நடத்திச் செல்வதன் பேரில் எதிர்ப்பைக் கோருதல்

மெததும்பர பிரதேச சபை 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி நடத்திய அதன் பொதுக் கூட்டத்தில் இ 02 இலக்கம் கொண்ட பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

ரவிந்து உஸ்வெட்டகெய்யாவ,
தவிசாளர்,
மெததும்பர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மெததும்பர
2025, நவெம்பர் 18.

**தீர்மானம்**

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம்) 7 (1) பிரிவின் கீழ் மெததும்பர பிரதேச சபைக்குச் சொந்தமான மாட்டிறைச்சி கடையை 2026 ஆம் ஆண்டில் நடத்திச் செல்வதன் மீது எதிர்ப்பைக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இந்த அனுமதிப்பத்திரம் வழங்குவதை எதிர்க்கும் மெததும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வதியும் எவரேனும் இதற்கான தமது எதிர்ப்பைக் காட்ட விரும்பினால், அதன் காரணத்தைக் குறிப்பிட்டு இரட்டைப் பிரதிகளில் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 14 நாட்களுக்குள் அதனை எனக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

குறித்த கால எல்லைக்குள் இந்த அறிவித்தல் பற்றிய ஏதும் எதிர்ப்புகள் முன்வைக்கப்படவில்லை எனின், குறித்த வர்த்தக நிலையத்தை 2026.01.01 முதல் 2026.12.31 ஆந் திகதி வரை நடத்திச் செல்வதற்கென அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என்பதைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு வெளியிடுகின்றேன்.

12 - 535/1

---

## மெததும்பர பிரதேச சபை

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் கீழ் (272 ஆவது அதிகாரம்) மாட்டிறைச்சி விற்பனை நிலையம் நடத்திச் செல்வதன் பேரில் எதிர்ப்பைக் கோருதல்

மெததும்பர பிரதேச சபை 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி நடத்திய அதன் பொதுக் கூட்டத்தில் இ 04 இலக்கம் கொண்ட பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

ரவிந்து உஸ்வெட்டகெய்யாவ,
தவிசாளர்,
மெததும்பர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மெததும்பர,
2025, நவெம்பர் 18.

**தீர்மானம்**

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம்) ? (1) ஆம் பிரிவின் கீழ் மாட்டிறைச்சி விற்பனை நிலையத்தை நடத்திச் செல்வதற்கென அனுமதிப்பத்திரத்துக்காக கீழே அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர் முன்வந்துள்ளதனால், அதற்கான எதிர்ப்பைக் கோருவதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இந்த அனுமதிப்பத்திரம் வழங்குவதை எதிர்க்கும் மெததும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வதியும் எவரேனும் இதற்கான தமது எதிர்ப்பைக் காட்ட விரும்பினால், அதன் காரணத்தைக் குறிப்பிட்டு இரட்டைப் பிரதிகளில் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 14 நாட்களுக்குள் அதனை எனக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

குறித்த கால எல்லைக்குள் இந்த அறிவித்தல் பற்றிய ஏதும் எதிர்ப்புகள் முன்வைக்கப்படவில்லை எனின், குறித்த வர்த்தக அறுவை நிலையத்தை 2026.01.01 முதல் 2026.12.31 ஆந் திகதி வரை நடத்திச் செல்வதற்கென அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என்பதைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு வெளியிடுகின்றேன்.

**அட்டவணை**

| *விண்ணப்பதாரியின் பெயர்* | *வர்த்தகம் நடத்தப்படும் இடம்* | *வர்த்தகத்தின் தன்மை* |
|---|---|---|
| எம்.எப். அஹமத் சிராஜ் | இல, 70/A. அம்பகஹலந்த, தெல்தெனிய. | இறைச்சிக்கென மாட்டிறைச்சி வர்த்தகம் |

12 - 535/2

**மெததும்பர பிரதேச சபை**

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் கீழ் (272 ஆவது அதிகாரம்) மாடு அறுவை நிலையத்தை நடத்திச் செல்வதன் பேரில் எதிர்ப்பைக் கோருதல்

மெத தும்பர பிரதேச சபை 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆம் திகதி நடத்திய அதன் பொதுக் கூட்டத்தில் இ 05 இலக்கம் கொண்ட பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

ரவிந்து உஸ்வெட்டகெய்யாவ,
தவிசாளர்,
மெததும்பர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மெததும்பர
2025, நவெம்பர் 18.

**தீர்மானம்**

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம்) 7 (1) பிரிவின் கீழ் மாடு அறுவை நிலையத்தை நடத்திச் செல்வதற்கென அனுமதிப்பத்திரத்துக்காக கீழே அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர் முன்வந்துள்ளதனால், அதற்கான எதிர்ப்பைக் கோருவதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இந்த அனுமதிப்பத்திரம் வழங்குவதை எதிர்க்கும் மெததும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வதியும் எவரேனும் இதற்கான தமது எதிர்ப்பைக் காட்ட விரும்பினால், அதன் காரணத்தைக் குறிப்பிட்டு இரட்டைப் பிரதிகளில் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 14 நாட்களுக்குள் அதனை எனக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

குறித்த கால எல்லைக்குள் இந்த அறிவித்தல் பற்றிய ஏதும் எதிர்ப்புகள் முன்வைக்கப்படவில்லை எனின், குறித்த மாடு அறுவை நிலையத்தை 2026.01.01 முதல் 2026.12.31 ஆந் திகதி வரை நடத்திச் செல்வதற்கென அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என்பதைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு வெளியிடுகின்றேன்.

**அட்டவணை**

| *விண்ணப்பதாரியின் பெயர்* | *வர்த்தகம் நடத்தப்படும் இடம்* | *வர்த்தகத்தின் தன்மை* |
|---|---|---|
| எம்.எப். அஹமத் சிராஜ் | இல, 244. அம்பகஹலந்த, தெல்தெனிய. | இறைச்சிக்கென மாடு அறுவை செய்தல் |

12 - 535/3